# தற்கொலையும் அதன் அண்மைக்காலப் போக்கும் - ஏறாவூர் பொலிஸ் பிரிவிவை மையப்படுத்திய கள ஆய்வு

**ML.Mohamed Helfan(1), SMM. Mazahir(2)**

[1] Department of Islamic Studies, Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern University of Sri Lanka
[2] Faculty of Islamic Studies & Arabic Language,
South Eastern University of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

தன் உயிரைத் தானே மாய்த்துக் கொண்டு தன் குடும்பத்தையும் கஷ்டத்தில் சிக்க வைப்பதில் தற்கொலைக்குப் பிரதான இடம் உண்டு. ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தற்கொலையின் அண்மைக்காலப் போக்கையும் அதற்கான காரணங்களையும் கண்டறிதல் இந்த ஆய்வின் நோக்கமாகும். பண்பு ரீதியான ஆய்வு முறையிலமைந்த இவ்வாய்வு, ஆய்வுப் பிரதேசத்தின் திடீர் மரண விசாரணை அதிகாரி, பொலிஸ் நிலைய பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் உயர் அதிகாரி, போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் உயர் அதிகாரி மற்றும் சமூக நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக 10 நிறுவனங்களின் முக்கியஸ்தர்களிடம் பெறப்பட்ட நேர்காணலின் பகுப்பாய்வினையும் மேலும் திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸ் நிலையத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் மீளாய்வினையும் மையப்படுத்தியது. ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தற்கொலை வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்கொலை புரிபவர்களில் பெண்களே அதிகமாக உள்ளனர். அதிலும் இளம் வயதினரே அதிகமாக தற்கொலை செய்து கொள்கின்றனர். முஸ்லிம்களை விட இந்து சமயத்தினரே கூடுதலாக தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். தனியான அறைகளில் தூக்கிடுவதற்கு சீலை மற்றும் நைலோன் கயிறும் பயன்படுகின்றது. தற்கொலைக்கான காரணங்களில் முதன்மையானதாக நுண்கடன் அமைந்துள்ளதோடு, அதற்கு அடுத்த நிலையில் போதைப் பொருள் பாவனை, காதல், தொலைக்காட்சிப் பாவனை என்பவைகள் காணப்படுகின்றன. எனவே, தற்கொலையை இல்லாதொழிப்பதற்கான முன்னெடுப்புக்கள், அதற்கான வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** ஏறாவூர் பொலிஸ் பிரிவு, தற்கொலை, அண்மைக்காலப் போக்கு

## ஆய்வுப் பின்னணி

தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்வது தற்கொலை எனப்படுகின்றது. அதற்கு பல்வேறு பின்விளைவுகளும் தனிமனித, குடும்ப, சமூக ரீதியான தாக்கங்களும் உண்டு. கஷ்டங்கள், துன்பங்கள் உருவாவது மனித வாழ்வின் இயல்பாகும். அதனைத் தாங்கிக் கொள்ளும்

அமைப்பிலேயே மனிதனை இறைவன் படைத்துள்ளான். ஆனாலும் மனிதனின் வீணான ஆசைகள், கடன்சுமைக்கும் மன உளைச்சலுக்கும் வித்திட்டு, இறுதியில் தன் உயிரை தன்கையால் பறித்துவிடுவதைக் காணமுடிகிறது. பொதுவாக இன்று கடன்சுமை, குடும்பத் தகராறு, காதல், போதைவஸ்துக்கு அடிமையாகுதல், மனஅழுத்தம், இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, பரீட்சை மற்றும் கல்விச் சுமை அதிகரித்தல், நெருங்கிய உறவுகளின் திடீர் பிரிவு, பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமை, தொடர்ச்சியான ஏமாற்றங்கள் போன்ற காரணங்களினால் தற்கொலை இடம்பெறுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

ஒரு மனிதன் இறப்பதற்கான காரணங்களில் தற்கொலை 13ஆவது இடத்தை பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் செப்டம்பர் 10ஆம் திகதி சர்வதேச தற்கொலை தடுப்பு தினத்தை (World Suicide Prevention Day) தற்கொலைத் தடுப்புக்கான சர்வதேச அமைப்பு (International Association for Suicide Prevention - IASP), (World Health Organization - WHO) ஆகிய அமைப்புக்கள் தற்கொலையின் தாக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வுகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் என உலகளாவிய ரீதியில் நடாத்திய போதிலும் அதனால் சமூகத்தில் எவ்வித மாற்றங்களும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.[5]

இவ்வகையில் உலகில் உள்ள சமயங்களும் தற்கொலை செய்வதை தடுத்துள்ளதோடு, இஸ்லாமும் அதனை வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனை பின்வரும் அருள்மறை வசனம் தெளிவுபடுத்துகின்றது. "... மேலும் நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள்......" (04:29) என்றும் "வறுமைக்குப் பயந்து நீங்கள் உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். நிச்சயமாக அவர்களைக் கொலை செய்வது பெரும் குற்றமாகும்" (06:151) அத்தோடு பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் (02:84,85,178,179,194), (04:92,93), (05:28,30,32,45), (06:137,140), (17:31,33) (25:68), 60:12), (81,08,09) ஒருவர் தன்னைத்தானே கொலை செய்வதையும் ஒருவர் மற்றவரைக் கொலை செய்வதையும் முற்றாகத் தடுத்துள்ளதைக் காணலாம்.[6]


உலகளாவிய ரீதியில் இன்று அதிக தற்கொலைகள் இடம்பெறும் பகுதிகளாக சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பா பகுதிகள் இனங்காணப்பட்டுள்ளது. அதேவேளை பதிவு செய்யப்பட்ட தற்கொலைகள் இடம்பெறும் பகுதிகளாக லத்தீன் அமெரிக்காவும் ஆசியாவின் சில பகுதிகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அளவில் ஆண்டுதோறும் எட்டு இலட்சம் பேர் தற்கொலை செய்வதோடு, 40 வினாடிக்கு ஒரு முறை ஒருவர் தற்கொலை செய்துகொள்கிறார் என சுகாதார கல்விப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜே. எம். டபிள்யு. ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.[7] பெண்களை விட ஆண்களே தற்கொலை செய்வதில் முதன்மை பெறுவதோடு, 15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டவர்களே அதிகமாக தற்கொலை செய்வதாக உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.[8]

அத்தோடு உலகளாவிய ரீதியில் அதிக தற்கொலை நடக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.[9] இலங்கையில் 1995ஆம் ஆண்டே அதிகூடிய தற்கொலை இடம்பெற்றுள்ளமை பதிவாகியுள்ளது. ஒரு இலட்சம் பேருக்கு 28.5 விகிதத்தின் அடிப்படையில் இலங்கையில் தற்கொலை இடம்பெறுகின்றது.[10] அதிலும் குறிப்பாக இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு 97 தற்கொலைகளும் 2017ஆம் ஆண்டு அது சடுதியாக 116ஆக உயர்வடைந்துள்ளதோடு 2018ஆம் ஆண்டில் 06 மாதங்களில் மாத்திரம் 85 தற்கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. இதனைப் பின்வரும் வரைபடம் 1 காண்பிக்கின்றது.

---

[5] https://tamil.oneindia.com/cj/puniyameen/today-is-world-suicide-prevention-day-183100.html)
[6] அல்குர்ஆன்
[7] http://www. virakesari.lk 19.04.2018
[8] https://tamil.oneindia.com/cj/puniyameen/today-is-world-suicide-prevention-day-183100.html
[9] http://www. virakesari.lk 19.04.2018
[10] https://www.newsfirst.lk/tamil/2014/09

வரைபடம்: 1




(மூலம்: திடீர் மரண விசாரணை அதிகாரி)

கடந்த 2014 ஆண்டு தொடக்கம் 2018 (முதல் 06மாதங்கள்) ஆம் ஆண்டு வரையிலான 54 மாதங்களில் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் 156 தற்கொலைகள் இடம்பெற்றுள்ளதானது இப்பிராந்தியத்தில் தற்கொலை அதிகரிப்பின் விகிதத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்த அடிப்படையில், இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தற்கொலை அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களையும் அதன் அண்மைக்காலப் போக்கையும் கண்டறிவதாக அமைந்துள்ளது

**ஆய்வுப் பிரச்சினை**

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெறுவதானது அப்பிராந்திய குடும்பங்களில் பல சிக்கல்களையும் நிம்மதி அற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தற்கொலையின் அண்மைக்கால போக்கையும் அது இடம்பெறுவதற்கான காரணங்களையும் அடையாளப்படுத்தல்.

**ஆய்வுமுறையியல்**


விபரண பகுப்பாய்வு முறையில் அமைந்த இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். பிராந்தியத்தில் காணப்படுகின்ற 10 சமூக நிறுவனங்களின் முக்கியஸ்தர்களிடம் நேர்காணல் செய்யப்பட்டதோடு, இடம்பெற்ற தற்கொலையின் அறிக்கையும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி 2ஆம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் coding முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு, விரிதாள் (Excel Sheet) மூலம் விளக்கங்களும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும், பிரதான கண்டறிதல்களும்**

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தற்கொலையின் வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த 54 (4.5 வருடம்) மாதங்களில் சுமார் 156 தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக ஒவ்வொரு


வருடத்திலும் தற்கொலையின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.

வரைபடம்: 02





ஏறாவூர் பொலிஸ் பிரிவில் அதிக தற்கொலை இடம்பெறும் இடங்களாக வந்தாறுமூலை, களுவன்கேணி, சித்தாண்டி, ஆயித்தியமலை ஆகிய தமிழ் மக்கள் செறிந்து வாழும் கிராமங்களே பதிவாகியுள்ளன. முஸ்லிம் பிராந்தியத்தில் மிகக் குறைவாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (நேர்காணல்: எம்.எஸ்.எம். நசீர்)

தற்கொலை புரிபவர்களில் பெண்களே அதிகமாக உள்ளார்கள். கடந்த நான்கு வருடங்கள் மற்றும் 06 மாதங்களில் 156 தற்கொலைச் சம்பவங்களில் 68 (43.6%) ஆண்களும் 88 (56.4%) பெண்களும் அடங்குகிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஆண்களின் தற்கொலை அதிகரிப்பதோடு, பெண்களின் தற்கொலையும் அதிகரித்துள்ளது. விகிதத்தின் அடிப்படையில் ஒப்பீட்டு நோக்கும் போது ஆணின் தற்கொலையை விட பெண்களின் தற்கொலை விகிதமே அதிகமாகும். இதனை பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.





வரைபடம்: 03

வயதடிப்படையில் நோக்கும் போது 15 – 25 வயதிற்குற்பட்டவர்களே முதன்நிலையிலும் 26 – 45 வயது வரையானவர்கள் இரண்டாம் நிலையிலும் அதற்கு அடுத்த நிலையில் 46 – 56 வயதானவர்களும் தற்கொலை செய்துள்ளார்கள். இதனை பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.




வரைபடம் - 05

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற தற்கொலை சம்பவங்களில் முஸ்லிம்கள் ஈடுபட்டமை மிகக் குறைவாகவே உள்ளது. கடந்த 54 மாதங்களில் இடம் பெற்ற மொத்த 156 தற்கொலை சம்பவங்களில் 04 (3%) பேர் மாத்திரமே முஸ்லிம்களாக உள்ளனர். இதனை பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்துகிறது.




வரைபடம்: 06

மேலும் இப்பொலிஸ் பிரிவில் தற்கொலைக்காக பயன்படுத்தப்படும் உபகரணமாக சீலை, சாரம் மற்றும் நைலோன் கயிறுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தனியான அறைகளில் தற்கொலை இடம்பெறுவதும் கண்டறிய முடிந்தது. (நேர்காணல்: திடீர் மரண விசாரணை அதிகாரி)

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் அதிக தற்கொலை இடம்பெறுவதற்கான காரணங்களில் முதன்மையானதாக நுண்கடன் திட்டம் அமைந்துள்ளது. தனது தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் கடன் தொகையை தனியார் நிறுவனங்களிடமிருந்து (RDB, Barakah, LOLC) பெற்றுக் கொண்டு, அதனை உரிய தினத்தில் செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் அதற்கு மாற்றீடாக தற்கொலை அமைந்துவிடுகிறது.

இப்பிராந்திய மக்களை நுண்கடனுக்கு அடிமையாக்கும் காரணிகளில் முதன்மையானதாக வறுமை மற்றும் அவர்களது தொழில் என்பன அமைந்துள்ளன. இங்கு சுமார் 74.2% வீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள்.[11] இதனால் அவர்களது வறுமையைப் போக்குவதற்காக வேண்டி இக்கடன் திட்டத்தைப் பெறுகிறார்கள். மேலும் இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக

[11]( ஏறாவூர் பற்று பிரதேச செயலகம், 2018)

மீன்பிடி, விவசாயம் என்பன காணப்படுவதும் அத்தொழிலை அபிவிருத்தி செய்ய எத்தனிப்பதும் நுண்கடன் பெறும் நிலைமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இங்கு தொழிலை மேம்படுத்துவதற்காக கடன்பட்ட போதிலும் தொழிலுக்காகவன்றி ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்காகவே நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நுண்கடன் பயன்படுத்தப்படுகின்றது. (நேர்காணல்: எஸ். நாதன், 2018) இதுவே, அவர்களைத் தற்கொலைக்கு இட்டுச் செல்கின்றது.

போதைப் பொருள் பாவனையும் தற்கொலைக்கு மிக முக்கிய காரணமாக அமைந்துள்ளது. கடந்த 2013 - 2016 வரையான காலப்பகுதிகளில் ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் போதைப் பொருளுடன் தொடர்பான குற்றச் செயல்களே அதிகமாகக் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.


நான்கு வருடங்களில் மொத்தமாக 2235 குற்றச் செயல்களில் 1724 (77.13%) குற்றங்கள் போதையுடன் தொடர்பானதாகவே உள்ளது. 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் போதைப் பொருள் தொடர்பான குற்றம் (84.5%) வீதத்தின் அடிப்படையில் முதன்மை பெறுவதோடு அதற்கு அடுத்தடுத்த நிலையில் 2014ஆம், 2015ஆம் ஆண்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனை பின்வரும் அட்டவணை 1 காண்பிக்கின்றது.

அட்டவணை – 01

| விபரம் | 2013 | 2014 | 2015 | 2016 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொத்த குற்றச்செயல்கள் | 762 | 683 | 435 | 355 | **2235** |
| போதைப் பொருளுடன் தொடர்பான குற்றச்செயல்கள் | 517 (67.84%) | 562 (82.28%) | 345 (79.31%) | 300 (84.50%) | **1724 (77.13%)** |
| ஏனையவை | 245 (32.16%) | 121 (17.72%) | 90 (20.69%) | 55 (15.50%) | **511 (22.87%)** |

(மூலம்: ஏறாவூர் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு, 2016)

போதைப் பொருள் பாவனையின் காரணமாக குடும்பப் பிரச்சினைகள் முதன்மை பெறுகின்றது. கடந்த 2013 - 2016 வரையான நான்கு வருடங்களில் மொத்தமாக 3382 முறைப்பாடுகளில் (குடும்பப் பிரச்சினைகள், மனைவி பிள்ளைகளுக்கு அடித்தல், சிறுவர் துஷ்பிரயோகம், திருமணம் முடிப்பதாக பெண்களை ஏமாற்றல்) 1907 (56.38%) முறைப்பாடுகள் குடும்பப் பிரச்சினைகள் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. இப்பிரச்சினைகளில் சிக்கியுள்ள சிலர் இறுதியில் தற்கொலைக்கு சென்றுள்ளனர். (நேர்காணல்: சாஜன் சில்வா) இதனைக் கீழ்வரும் வரைபடம் காண்பிக்கிறது.




வரைபடம்: 07

அத்தோடு காதல் விடயங்களும் தற்கொலைக்குக் காரணமாக அமைந்துள்ளன. அதாவது ஒரு ஆண் ஒரு பெண்ணை விரும்பி இருக்கும் நிலையில் அல்லது ஒரு பெண் ஒரு ஆணை காதல் கொண்டிருக்கும் நிலையில் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பினால் காதலனின் செயற்பாட்டை காதலியும் காதலியின் செயற்பாட்டை காதலனும் திருத்த முயற்சித்த வேளை தற்கொலையில் முடிந்த சம்பவங்களும் இப்பிராந்தியத்தில் காணப்படுகின்றன. காதலன் தனக்கு ஏசியதால் காதலன் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் Video காட்சியுடன் காதலியின் உயிர் பிரிந்தும் உள்ளது. (நேர்காணல்: எம்.எஸ். நசீர், 2018)

அதிகரித்த தொலைக்காட்சிப் பாவனையின் காரணமாக அண்ணன், தங்கை இருவருக்கிடையில் தொலைக்காட்சியின் Channel மாற்றுகையில் தகராறு ஏற்பட்டு அண்ணன் தனது அறையில் தூக்கிட்டு இருந்த சம்பவங்களும் இங்கு பதிவாகியுள்ளது. (நேர்காணல்: அச்சலா சுகெந்தினி, 2018)

**முடிவுரை**

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்கொலை விகிதம் அதிகரித்துக் காணப்படுவதோடு, பெண்களின் தற்கொலை வீதமே உயர்வாக உள்ளது. இதனால் சமூகக் கட்டமைப்பில் குடும்பங்கள் பல சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றன. தற்கொலைக்கான காரணங்களில் நுண்கடனே முதன்மையானதாக உள்ளதால் இப்பிராந்திய மக்களின் வறுமையைப் போக்குவதற்கு ஆதாரமாக விளங்குகின்ற தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் தொழில் பேட்டைகளை நிறுவதற்கும் சமூக நல நிறுவனங்கள் முன்வர வேண்டும். அத்தோடு போதைப் பொருள் பாவனை, காதல், தொலைக்காட்சி நாடகம் போன்றவற்றை குறைப்பதற்கும் சமூக நிறுவனங்கள் முன்வரவேண்டும். எனவே, சமூக ஆர்வலா்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும் இவ்வாய்வின் கண்டறிதல்கள் துணையாக அமைய முடியும்.

**பரிந்துரைகள்**

- ✓ மதஸ்தலங்கள், மதக் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என்பன தற்கொலையின் பாரதூரம், பாதக விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள், இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல்.
- ✓ இளைய சமுதாயத்தை ஆன்மீக ரீதியாக வலுவூட்டல்.

- ✓ நுண்கடன் திட்டத்தை சமூகத்தில் இருந்து குறைய வைத்து, மக்களின் வறுமையைப் போக்க தொழில் திட்டங்களை உருவாக்கல்
- ✓ தனியான அறையில் பெண்கள் மற்றும் ஆண்கள் தனித்திருப்பதை குறைத்தல்
- ✓ போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தல்

**உசாத்துணைகள்**


1. தர்ஜமதுல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு, (2015) இலங்கை, பறகஹதெனிய: ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா தலைமையகம்.
2. வருடாந்த அறிக்கை, ஏறாவூர் பற்று பிரதேச செயலகம், 2018.
3. புன்னியாமீன் (10.09.2013). "இன்று உலகில் தற்கொலை முயற்சி தடுப்பு முயற்சி" [online] available: https://www.tamil.oneindia.com/cj/puniyameen/today-is-world-suicide-prevention-day-183100.html [accessed] : 07.07.2018
4. றினோஸ் கனீபா (2017.10.16). "இலங்கையில் தற்கொலை வீதம் உயர்ந்துள்ளது" [online] available: https://www. srilankanmuslim.lk [accessed] : 07.07.2018
5. ஜே.எம்.டப்ளியூ ஜயசுந்தர பண்டார (19.04.2018). "அதிகரிக்கும் தற்கொலை" [online] available: https://www.virakesari.lk [accessed] :07.07.2018
6. அதிக தற்கொலை நடக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு நான்காம் இடம் (05.09.2014) [online] available: https:// https://www.newsfirst.lk/tamil/2014/09 [accessed] :07.07.2018


**நேர்காணல்**

7. சாஜன் சில்வா, போதைப் பொருள் தடுப்பதிகாரி, ஏறாவூர் பொலிஸ் நிலையம், 17.05.2017
8. எம்.எஸ். நசீர், திடீர் மரண விசாரணை அதிகாரி, ஏறாவூர் பொலிஸ் பிரிவு, 25.06.2018
9. அச்சலா சுகெந்தினி, மகளிர் அமைப்பு, ஏறாவூர். 25.06.2018
10. சிறின்தான்,பி.எம். தலைவர், பெண்கள் சமூக மறுமலர்ச்சி மன்றம், ஏறாவூர். 27.06.2018
11. பரசுராமன் தவராசா, தலைவர், பிள்ளையார் கோயில் சித்தான்டி, 27.06.2018
12. சுரேஷ் குமார், தலைவர், தன்வந்திரி அமைப்பு, சித்தான்டி, 27.06.201